# ஆடிடும் தெய்வமே

ராகம்: திலாங்; தாளம்: ஆதி
இயற்றியவர்: தங்கம் பரமேஸ்வரன்

## பல்லவி

ஆடிடும் தெய்வமே அம்பல
வாணனே தில்லையிலே
அண்டமெல்லாம் அதிர அன்பர் மனம் குளிர

## அனுபல்லவி

அரவும் நிலவும் அலங்கரித்திடவே
அங்கயற்க்கண்ணி அகமகிழ்ந்திடவே

ததிங்கிணதோம் தகதிமி ததிங்கிணதோம் திமி திமி
ததிங்கிணதோம் தகதிமி ததிங்கிணதோம் எனவே

## சரணம்

மார்க பந்துவாய் மண் சுமந்தவனே
மஹாதேவனே நஞ்சுண்டவனே

அறுபத்து மூன்று நாயன்மார்களும்
அமுதென தமிழிலினில் பாடிப்பணிந்திட

ததிங்கிணதோம் தகதிமி ததிங்கிணதோம் திமி திமி
ததிங்கிணதோம் தகதிமி ததிங்கிணதோம் எனவே

©Copyright 2001-2015, Thangam Parameswaran, Orleans Ontario Canada